முருப்பெருமான் துணை

**மகான் பத்ரகிரியார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**14.03.2024,** வியாழக்கிழமை

1. தவசியே ஆறுமுக அரங்கனே
   தன்னார்வத் தொண்டர் படையை
   அவனியெங்கும் நிரப்பி இனிதே
   அகிலமாற்றம் செய்யவந்த ஞானியே
2. ஞானியே உன்பெருமை கூறி
   நாட்டிட சோபகிருது சேல் திங்கள்
   இனிமைபட ஏக திகதி குருவாரம்
   (சோபகிருது வருடம் பங்குனி மாதம் முதல் நாள், 14.03.2024, வியாழக்கிழமை)
   இயம்பிடுவேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை பத்ரகிரியார் யானும்
   அகிலம் நலம் பெற உரைப்பேன்
   ஆசிதந்து அரங்கன் வளர்க்கின்ற
   அன்னதான சேவைவழி மக்கள் வர
4. வருகவே எங்கும் பசிபிணி விலகி
   வளமிக்க உலகமாக மாறும்
   தரும குணம் யாவர்க்கும் பெருகி
   தயவான படைகளாக மக்கள் படை
5. மக்கள் படை பெருகி உலகில்
   மாற்றம் ஞானவழிகளாக மாறும்
   தேக்கமின்றி தருமம் வளரவே
   தெய்வ பலம் திருவருளால் கிட்டும்
6. கிட்டவே மக்களிடை தெளிவுதிடம்
   குறைவிலா தருமபலமும் கூடி
   இட்டம் போல் உலகில் அமைதி
   எங்கும் நிரம்பி பாதுகாப்புக் கூடி
7. கூடியே ஞானத்தலைமை தனை
   குறிப்பாக அரங்கன் வேண்டல்படி
   தேடியே ஞானவான்கள் படை
   தேசிகன் வழி அளவிலா உருவாகி

8. உருவாகி ஞான ஆட்சியதும்
உயர்வான அரங்கன் தலைமையில்
குருவருளாக நிரம்பிடக் காணும்
குறிப்பாக பிரணவக் குடில் நாடி

9. நாடியே அரங்கன் சேவையை
ஞான சேவையாக ஏற்று
தேடியே தொடர்ந்து வந்து
தெய்வங்கள் துணை கண்டிட

10. கண்டிட ஞானசித்தர் காலம்
கலியினில் வானவர்கள் வியக்க
உண்டாகி உலக மாற்றம்
உயர்வான அரங்கன் ஆசிபட

11. ஆசிபட சத்திய யுகம் ஞானயுகமென
அனைத்து தேற்றங்களும் கண்டு
வாசிவென்ற ஞானிகள் சூழ
வையகம் நல்லாட்சிப் பெறும்

துல்லிய ஆசி முற்றே

—சுபம்—